# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்

## Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush NSW 2140**

**www.tsch.org.au** **info@tsch.org.au**


# ஆண்டிறுதிப் பரீட்சை 2016

**ஆண்டு: 4** **திகதி: 26 - 11 - 2016**

**ஆசிரியர்: திருமதி செ ஜெயமனோகர்**

**மாணவர் பெயர்:**

| வினா இலக்கம் | மொத்தப் புள்ளிகள் | மாணவர் பெற்ற புள்ளிகள் |
|---|---|---|
| 1 | 20 | |
| 2 | 10 | |
| 3 | 15 | |
| 4 | 10 | |
| 5 | 10 | |
| 6 | 15 | |
| 7 | 20 | |
| | | |

பெற்றோர்/பாதுகாவலர் கையொப்பம்:

1. **பின்வரும் பந்தியை வாசித்து தரப்பட்டிருக்கும் வினாக்களுக்கு விடை தருக. (20 புள்ளிகள்)**

**விபுலானந்தர்**

இலங்கையில் தமிழ் வளர்த்த பெரியார்களுள் விபுலானந்தரும் ஒருவர் ஆவார். இவர் மட்டக்களப்பை அடுத்துள்ள காரைதீவு எனும் ஊரில் 1892 ம் ஆண்டு பிறந்தார். இவரது இயற்பெயர் மயில்வாகனன். இவர் தமது இளமைக் கல்வியை காரைதீவு, கல்முனை, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் கற்றார். அதன் பின்பு கொழும்பு சென்று தொழில் நுட்பக் கல்வியையும் கற்றதோடு கேம்பிறிட்ச் பல்கலைக் கழகத்தின் தேர்வு எழுதி "இளம் அறிவியல்" பட்டமும் பெற்றார்.

விபுலானந்தர் தமிழில் மிக ஆர்வம் கொண்டவர். இவர் தனது 24வது வயதில் மதுரைத் தமிழ் சங்கத்தின் "பண்டிதர்" பட்டம் பெற்றார். இப்பட்டம் பெற்ற முதல் இலங்கைத் தமிழர் இவர்தான். இவர் ஒரு துறவியும் ஆவார். இவர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகவும் இருந்ததோடு பல நூல்களையும் கட்டுரைகளையும் மொழிபெயர்த்தும் உள்ளார்.

இவர் இலங்கையில் மட்டக்களப்பில் பல பாடசாலைகளை ஆரம்பித்து தமிழ்க்கல்வியை மாணவர்களுக்குக் கற்பித்தார். இன்றும் அவரது பாடசாலைகள் இயங்கிக் கொண்டிருப்பது பெருமைக்குரியது.

விபுலானந்தர் "யாழ் நூல்" எனும் ஆய்வு நூலையும் எழுதினார். இந்நூல் பழந்தமிழரின் இசை நுட்பங்களைப் பற்றியது. இந்நூல் சிலப்பதிகாரத்திலும், சங்க இலக்கியத்திலும் இடம்பெறும் "யாழ்" எனும் வாத்தியக் கருவியைப் பற்றிக் கூறுகிறது. எனவே நாம் எமது நாட்டுத் தமிழ்ப் பெரியார்கள் பற்றியும் அறிந்து கொள்வது அவசியம்.

1. விபுலானந்தர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்?

..........................................................................................................................................

2. இவரது இயற்பெயர் என்ன?

..........................................................................................................................................

3. இவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பெற்ற பட்டத்தின் பெயர் என்ன?

..........................................................................................................................................

4. விபுலானந்தர் எழுதிய நூலின் பெயர் என்ன?

..........................................................................................................................................

5. இவர் தமிழுக்கு ஆற்றிய தொண்டுகள் இரண்டு தருக.

..........................................................................................................................................

2. (10 புள்ளிகள்)

**2.1 தரப்பட்ட சொற்களை பிரித்து எழுதுக.**

1. ஓய்வெடுத்தன . . . . . . . . . . . . . + . . . . . . . . . . . . .

2. நுழைவுச்சீட்டு . . . . . . . . . . . . . + . . . . . . . . . . . . .

3. பத்துமணி . . . . . . . . . . . . . + . . . . . . . . . . . . .

4. தெரியவில்லை . . . . . . . . . . . . . + . . . . . . . . . . . . .

5. வெற்றிபெற்றான் . . . . . . . . . . . . . + . . . . . . . . . . . . .

**2.2 சேர்த்து எழுதுக**

1. பளிங்கு + தூண்கள் = . . . . . . . . . . . . . . . . . . . .
2. கொடி + கம்பம் = . . . . . . . . . . . . . . . . . . . .
3. முத்தம் + இட்டாள் = . . . . . . . . . . . . . . . . . . . .
4. செல்லம் + பிராணி = . . . . . . . . . . . . . . . . . . . .
5. கலை + விழா = . . . . . . . . . . . . . . . . . . . .

**3. கீழே தரப்பட்டுள்ள சொற்களை அதன் பொருத்தமான இடங்களில் நிரப்புக. (15 புள்ளிகள்)**

தெய்வம் - உற்பத்தி – குறிப்புக்கள் - மின்னலுடன் - உரோமம்

1. பிளற்றிப்பஸ்ஸின் உடலில் . . . . . . . . . . . . . . . உண்டு.
2. ஆறுகள் மலைகளில் இருந்து . . . . . . . . . . . . . . . ஆகின்றன.
3. அன்னையும் பிதாவும் முன்னறி . . . . . . . . . . . . . . .
4. பல்வேறு உயிரினங்கள் பற்றிய . . . . . . . . . . . . நீர்வாழ் உயிரினக் காட்சிச் சாலையில் இருந்தன.
5. இடி . . . . . . . . . . . . . . மழை பெய்தது.

**4. ஒத்த சொல்  எதிர்ச் சொல் எழுதுக. (10 புள்ளிகள்)**

ஒத்த சொல் - கோடிடப்பட்ட சொற்களுக்கு ஒத்த சொல் எழுதுக

1. அவள் **நித்திரை** விட்டு எழும்பினாள். . . . . . . . . . . . . . . . .
2. நான் கடவுளை **வணங்கினேன்**. . . . . . . . . . . . . . . . . .
3. **சூரியன்** கிழக்கில் உதிப்பான். . . . . . . . . . . . . . . . . . .
4. **வாரத்**தில் ஏழு நாட்கள் உண்டு. . . . . . . . . . . . . . . . . .
5. எனது **வீடு** மலையில் உள்ளது. . . . . . . . . . . . . . . . . . .

கோடிட்ட சொற்களுக்கு எதிர்ச் சொல் எழுதுக.

1. **இளமையில்** கல்வி சிலையில் எழுத்து. . . . . . . . . . . . . . . . .
2. போட்டியில் ஆமை **தோல்வி** அடைந்தது. . . . . . . . . . . . . . . . .
3. குமரனும் கண்ணனும் **பகைவர்கள்**. . . . . . . . . . . . . . . . . . .
4. வாணி **கவலையாக** இருந்தாள். . . . . . . . . . . . . . . . . . . .
5. எனக்கு **காலையில்** வகுப்பு உண்டு. . . . . . . . . . . . . . . . .

**5. தொடர்பு படுத்துக.  (10 புள்ளிகள்)**

| | |
|---|---|
| ஒவ்வொரு இன மக்களுக்கும் | ஆண்டு தோறும் விவசாயி எடுக்கும் விழாவாகும் |
| சூரிய சக்தி இல்லாது | நல்ல உணவு கொடுத்தல் வேண்டும். அன்பாக வளர்க்க வேண்டும். |
| ஈஸ்டர் கண்காட்சி என்பது | எமது நாட்டின் பாரம்பரிய உயிரினங்கள். |
| செல்லப் பிராணி என்றால் | பாரம்பரியமான பண்பாடு உண்டு. |
| கங்காரு இமியு என்பன | உயிர்கள் வாழ முடியாது. |

**6. பின்வருவனவற்றில் ஒன்றைப்பற்றி அயல் நாட்டில் வசிக்கும் உறவினருக்கு அல்லது நண்பருக்கு 40 சொற்களுக்குக் குறையாமல் கடிதம் ஒன்று எழுதுக. (15 புள்ளிகள்)**

1. உமது பிறந்த நாள் கொண்டாட்டம்
2. அவுஸ்திரேலியாவின் கால நிலை

**7. பின்வருவன ஒன்றைப்பற்றி 40 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை ஒன்று எழுதுக. (20 புள்ளிகள்)**

1. எனது தமிழ்ப்பாடசாலை
2. வாணி விழா
3. ஈஸ்டர் கண்காட்சி
4. என்னைக் கவர்ந்த தகவல்